அகஸ்தியமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய

## பெண்கள் செய்குறி நூல்

# சந்தன நூல்சாஸ்திரம்



OF THE REGISTRAR
25 MAR

பதிப்பாளர்:

அமரம்பேடு. குழந்தைவேல் முதலியார்

தெய்வமகள் விலாச அச்சுக்கூடம்

இதன் விலை 1951 அணா 6

24. தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை.

100922

LC 9F
N51

★ தெய்வமகள் பதிப்பை கவனித்து வாங்கவும் ★

# பெண்களின் சுபாசுபங்களை விளக்கிக்காட்டும்

# பெரிய ருதுநூல் சாஸ்திரம்

[கா. தெய்வசிகாமணி சோதிடர் எழுதியது]

இதில் ருது உற்பத்தியும், அவற்றிற்குரிய கால அமைப்பும், அடையாளங்களும், 12-பாவவிசேஷத்தால் தன் வாழ்க்கைவிஷயம், புத்திரவிஷயம், பர்த்தாவிஷயம், பொருள் விஷயங்களும், மாதபலன் - நக்ஷத்திர பலன் - திதிபலன்-வாரபலன் - இலக்கின பலன் என்னும் முக்கிய விசேஷங்களும், துணிசயமும், சுமங்கலி அமங்கலி என்னும் இரகசிய விசேஷங்களும், ருதுதோஷ பரிகாரங்களும், அவற்றிற்குறிய சக்கரங்களும் விவரித்து விரிவாயெழுதி அச்சிடப்பட்டிருக்கிறது.

இதன் விலை ரூபா 1-4-0

சிறிய ருதுநூல் சாஸ்திரம் விலை அணா 4

உ

அகஸ்தியமுனிவர் அருளிய

# பெண்கள் செய்குறி நூல்

## பிள்ளையில்லா பெண்களுக்கு குணமும் மருந்து சேர்க்கையும் சொல்லுகிறது

ஞாயிற்றுக்கிழமை ருதுவானால் ராஜகுல மோகினி தேவதையணுகும் அதின் குணம்: வயிறுநோவும் சரீரம் எரிவுகாணும் மாதவிடாய் தங்கித்தங்கி வரும் புருஷன்மேல் தயவு பிள்ளை மத்திபம் அதற்கு புதன்கிழமையன்று மதுமாமிசத்தோடு அவள் தலையைச்சுற்றி சுடுகாட்டில் கொண்டுபோய்வைக்க விலகி பிள்ளை யுண்டாகும்.

திங்கட்கிழமை ருதுவானால் சாமுண்டி என்ற தேவதை யணுகும் அதின் குணம்: ருதுவான மற்றா நாள் அச்சமும் போகமும் செய்யும். அலறி யெழுந்திருப்பாள் அவளுக்கு பெரும்பாடுவரும் புருஷனைக் காணாமலிருந்தால் தலை வலிக்கும் மதிமயங்கும் சந்தோஷமில்லை தலைப் பிள்ளை பெண் பிறந்தால் பிள்ளை மத்திபமாம். அதற்கு வெற்றிலைப்பாக்கும் பருத்தி விதையும் தபனிமாவும் அவள் தலையைச் சுற்றி முச்சந்தி பாதையில் கழிப்புக்கொடுக்க பிள்ளை யுண்டாகும்.

செவ்வாய்க்கிழமை ருதுவானால் இராஜகுல தெய்வமென்ற தேவதை பத்தாம்நாள் அணுகும் அதின் குணம்: அவளுக்கு ஒருவேளை சரீரம் உலர்ந்து போகும் புருஷனைக் கண்டால் பயப்படுவாள் ஊச்சிரந்தோணும் தலைப்பிள்ளை ஆண் பிறக்கும் பெண் பிறந்தால் மத்திபம் செவ்வாய்க்

கிழமையில் தானே அருதியாவாள் புருஷன்மேல் தயவில்லை அந்ததேவதைக்கு மஞ்சணதி மரத் தடியில் பால், பழம், சர்க்கரை, தேங்காய், பச்சரிசி, பச்சைப் புனுகு சவ்வாது, செவ்வலரிப் புஷ்பம் இவ்வளவும் அவள் தலையைச்சுற்றி கழிக்கவும் பிள்ளை யுண்டாகும்.

புதன்கிழமை ருதுவானால் வாலிபப்பெண் தேவதை வந்தணுகும் அதின் குணம்: புருஷன் வீட்டுக்குள் போனால் இருளும் மயக்கமுந் தோணும் அதற்கு ஒரு கம்பிகரை சேலைவைத்து பூஜித்து அவள் தலையைச்சுற்றி யாருக்காவது கொடுத்து விட்டால் பிள்ளை யுண்டாகும்.

விழாழக்கிழமை ருதுவானால் எட்டாம் நாள் இருளன் என்கிற தேவதையணுகும் அதின் குணம்: பல ஜாதியைக் கண்டால் தயவாக வார்த்தையாடிக் கொண்டிருப்பாள் புருஷனை தன் ஆக்கினைக்குள் ஒரு மனிதனாக வைப்பாள் பிள்ளை யுண்டாக அழிந்து போகும் அதற்கு வன்னி மரத்தடியில் பல சாமானும் சேர்த்து கழிப்புக் கொடுக்க பிள்ளையுண்டாகும்.

வெள்ளிக்கிழமை ருதுவானால் அழகு சுப்பிரமணிய சுவாமி அணுகி இருப்பார் பிள்ளை மத்திபம் அதற்கு வெள்ளிக்கு வெள்ளி ஏழுகிழமை ஒரு சந்தியாக யிருந்து வரவும் இருபேருக்கு அன்னங் கொடுக்கவும் பிள்ளை யுண்டாகும்.

சனிக்கிழமை ருதுவானால் சர்வதாள் என்கிற தேவதையணுகும் அதின் குணம்: அவளறியாமல் போகம் செய்யும்பிள்ளை மத்திபமாம் ஆண்

பிள்ளை தரியாது அதற்கு மாமிசத்துடன் அவள் தலையைச் சுற்றி கொண்டுபோய் சுடுகாட்டில் கழிப்புக்கொடுக்க பிள்ளை யுண்டாகும்.

பெண்களுக்கு
குணமும் மருந்தும் சேர்க்கையும் சொல்லுகிறது

முதலாவது வீடுகூடி பிரிந்தவுடனே தலை நோய்க்காணும் அதற்கு பருத்திவிதை பருப்புங் காணுங்கோழி பித்தும் ஒன்றாகச் சேர்த்தரைத்து வீட்டுக்கு விலக்கமான நாலாம்நாள் அந்த மருந்தை வயிற்றில் பூசி மூன்றும் நாள் வீடுகூட கெற்ப முண்டாகும்.

இரண்டாவது பூவில் சதை வளர்ந்திருந் தால் அதின் குணம்: வீடுகூடி பிரிந்தவுடனே அவளுக்கு அருவருக்கும் அதற்கு மருந்து நற் சீரகமும் யானை நகமும், கடுகும், நெல்லிப்பருப் பும் சரி நிறையாக அரைத்து நாலாம்நாள் அவள் உள்ளங்கால் இரண்டிலும் தடவி வீடு கூட பிள்ளை யுண்டாகும்.

மூன்றாவது உஷ்ணம் மிகுந்திருந்தால் செய் யுங்குணம் வீடுகூடி பிரிந்தவுடனே இடுப்பும் அடி வயிறும் நோய்காணும் அதற்கு மருந்து மூந திரிப்பருப்பும், அகத்திப்பருப்பும் நல்லெண் ணெயில் அரைத்து வீட்டுக்கு விலக்கமாகிய நாலாம் நாள் கலத்தில் தடவி வீடுகூட பிள்ளை யுண்டாகும்.

நாலாவது வயிற்றில் கிருமியிருந்தால் செய் யுங் குணம்: வீடுகூடி பிரிந்தவுடனே உடப்பு நோய் காணும் அதற்கு மருநது: சவுக்காரம்

கடுக்காய், தான்றிக்காய், வாழைத்தண்டு சாறு விட்டரைத்து அவள்வீட்டுக்கு விலக்கமாகிய நாலாம் நாள் கலத்தில் தடவி வீடுகூட பிள்ளை யுண்டாகும்.

ஐத்தாவது தேவதையாக விருந்தால் அது செய்யுங் குணம்: வீடுகூடிப் பிரிந்தவுடனே கை கால் நோய் காணும் அதற்கு மருந்து: சோப்பு, கடுக்காய், சர்க்கரை யரைத்து கலத்தில் தடவி மூன்று நாளைக்கு வீடுகூட பிள்ளை யுண்டாகும்.

ஆறுவது கெர்ப்பத்தில் சுக்கிலத்தில் இரத்தம்போல் விழுந்தால் அது செய்யுங் குணம்: வீடுகூடினவுடனே குறுக்கு முதுகுநோய் காணும் அதற்கு மருந்து வெளவ்வால் பித்தும், தான்றிக்காயும், கஸ்தூரி மஞ்சள் சரி எடையாக அரைத்து அவள் உச்சி முதல் உள்ளங்கால் வரைக்கும் பூசி வீட்டுக்கு விலக்கமாகிய ஐந்து நாளைக்குப் பிறகு ஷை மருந்தை கலத்திற் பூசி வீடுகூட பிள்ளையுண்டாகும் இதின் குறி குணப்படி முறையிடாமல் செய்யவும்.

## மலடிகளுக்கு குறியறிதல்

இடைசிறிய மலடிக்கும் வயிற்றின் மலடிக்கும் தடிச்ச மலடிக்கும் விபரம். தீட்டு வருகிற போது பக்கமும் கீழ்பக்கமும் நோகும். நீர் இறங்கும்போது நோகும். அதற்கு மருந்து வெற்றிலைக்கள்ளி வேரை அரைத்து பாக்களவு யெடுத்து ஒரு சிரங்கை பசுவின் நெய்யில் குழைத்து நாலாம்நாள் துவக்கி ஏழுநாள் வரைக்கும்சாப்பிட தீரும்; பிறகு பால்வார்த்துண்ணவும்.

பித்தத்தினால் வந்த மலடிக்கு நீர் இறங்கும் போது கரப்படும் அதற்கு மருந்து சீந்தல் தண்டு, மூத்தக்காசு கூட்டி இரண்டுபடி தண்ணீர் விட்டு கால் படியாக காய்ச்சி பசுவின் நெய்யில் கலந்து நாலாம் நாள் முதல் மூன்று நாளைக்கு குடிக்கத் தீரும்.

கெர்ப்ப புழுவினால்வந்த மலடிக்கு கரப்படுகிறபோது பச்சரிசி கழுவிய தண்ணீர்போலிருக்கும். அதற்கு மருந்து சீந்தல் தண்டு, மூத்தக்காசு இலை,கள்ளிவேர் ஒரு கழஞ்சி பசுவின் நெய்யில் கலந்து நாலாம் நாள் கொடுக்கவும் தீரும்.

வாய்வு மிகுந்ததினால் வத்தமலடிக்கு கரப்படுகிறபோது நேரே நீர் இறங்கும் அதற்கு மருந்து: புளியம்வேர், கத்தாழைச்சோறு காடிவார்த்து அரைத்து நாலாம் நாள் முதல் நாலு நாளைக்கு குடிக்கவும். செமித்தாள் பாலுஞ்சோறு தின்ன தீரும்.

## பிள்ளைபேற வருத்தமானால்

பசலையும் பசுவெண்ணெயும் ஒன்றாக அரைத்துக் கொடுக்க வருத்தமில்லாமல் பெறுவாள். பசலையும், நாக்களாய் பூச்சியும் பசுவின் வெண்ணெயிலரைத்து இரண்டுக்கால் கிரண்டையிலும் தடவ பெறுவாள்.

## மாதவிடாய் காணாத பெண்களுக்கு

தாளிசயிலை பலம் ஐந்து நன்றாயவித்து பிழிந்து நாழி தண்ணீர் எடுத்து ஈரவெங்காயம் மிளகு வகைக்குப் பலம் ஒன்று, ஷை தண்ணீரில் அரைத்து கலக்கி மூன்றுநாள் குடிக்க முழுக்குண்டாம் மாதவிடாய் காணும்.

## பெண்களுக்கு கேர்ப்ப முண்டாக மருந்து

பெருங்காயம் விராகனெடை 20-தேங்காய் ஒன்ருய் திருகி பூவெடுத்து முருங்கைப்பூ படி அரை, வெள்ளைப்பூண்டு கால்படி இதுவெல்லாம் வேடுகட்டி அவித்து எடுத்து பிழிந்து கொடுக்கவும் சர்க்கரை, கருப்புகட்டி சேர்த்து தின்னவும். கெர்ப்பபூச்சி அறும் பிள்ளை யுண்டாகும்.

குழித்தாமரை வேர் பாக்களவு அரைத்து பசுவின் வெண்ணெயில் குழப்பி தின்னக்கொடுக்கவும் பிள்ளை யுண்டாகும்.

## வயிற்றில் செத்த பிள்ளை விழ

பெருங்காயம், இந்துப்பு 2-விராகனெடை அரைத்து கொடுக்க விழுந்துவிடும்.

## பெண்களுக்கு கேர்ப்ப புழு விழ

கொத்தான் கொழிஞ்சிவிரையும் கொடிகத் தாளிசமூலத்துடன் நிழலில் உலர்த்தி பொடித்து பலகரைப்பொடியும் கூட்டி எலுமிச்சம்பழச் சாரத்திலே, குழப்பிக்கொடுக்கவும். அதில்விழா விட்டால் ஆமணக் கெண்ணெயும் சர்க்கரையும் கூட்டிக்கலக்கி கொடுக்கவும் ஆரும் நாள் பூச்சி விழும் கெர்ப்ப முண்டு.

வசியம். கோரோசனை காந்தம் மனேசிலை ரசம் வகைக்கு விராகனெடை-1, ஆண் சிட்டுக்குருவியை மயிரைப்போக்கி அதின் வயிற்றிற்குள் இந்த மருந்தை வைத்து பவனவாயும் தைத்து சீலைமண் செய்து கோழிப்புடம் போட்டு எடுத்து வைத்துக் கொள்கிறது அதில் விராகனெடை-1, சித்தகத்திலை விராகனெடை-1 அப்பியில்வைத்து

பசுவின் வெண்ணெயில் அரைத்து தன் கருவுங் கூட்டி வெற்றிலையில் தடவி தின்னக்கொடுக்க வருவாள்.

ஷை பெண் மாதவிடாயில் குழைத்து சர்க்கரையில் பிசைந்து அவளுக்கு இச்சைப்பட்டவனுக்கு கொடுக்க அவள் சொன்னபடி கேட்டு நடப்பான். அவள்கேட்டதெல்லாம்கொடுப்பான்.

## வசிய மந்திரம்

ஓம் பகவதி கௌரி பஞ்சாக்ஷரத்தில் லோக வசீ கரி மகாமோகினி அய்யும் கிலியும் அரவணை கலியாணி நாராணதேவி வீரலட்சுமி என்வாக்கிலேயும் மனதிலேயும் மோகித்து நிற்க சிவா இதோமந்திரத்தை தேங்காய்,வாழைப்பழம், எலுமிச்சப்பழம், மல்லிகைப்பூ இவ்வளவும்வைத்து சாம்பிராணி புகைத்து மேற்குமுகமாக யிருந்து (1128) உரு-செபிக்கவும். பின்னுடி செய்யவேணுமென்றால் வாழையிலைமேல் விபூதி பரப்பி தான் நாடப்போகிற பேரை அந்த விபூதிமேலெழுதி சாம்பிராணி புகைத்து இருபத்தெட்டு தரம் இந்த தியானத்தைச் சொல்லி விபூதி எடுத்துப் பூசிக் கொண்டு போனால் தான் நாடிப்போன வேலை உடனே நடக்கும் பூசாதபேர்களாயிருந்தால்ஷை முறைப்படிச் செய்து வேஷ்டி நுனியில் முடிந்துக்கொண்டுபோக உடனே கைவசமாகும்.

## வசியம்

கருங்கோழி முட்டையைக் கொண்டுவந்து எழுத்தாணியால் பொத்தி அதில் அரை கழஞ்சி ரசம் அத்துடன் விட்டுஈனுகிடாரிசாணிகொண்டு பொதிந்து பிள்ளையும் அந்த கிடாரி சாணியில்

வைத்து சுட்டு மஞ்சக் கருவை யெடுத்து புனுகும் கற்பூரமுங் கூட்டி மைபோலரைத்து சிமிளில் வைத்துக்கொண்டு மல்லிகைப்பூ, இரண்டு எலுமிச்சம்பழமும் மூன்னே வைத்து சாம்பிராணி புகைத்து (1128) உரு கொடுத்து ஷை மையை யெடுத்து பொட்டிட்டு நமக்கு இஷ்டப்பட்ட ஸ்திரீ முன்னேசென்று அவள் முகத்தைப் பார்த்து நமசியென்று மூன்றுதரம் சொல்லி நாம் முன்னேபோக அவள் பின் வருவாள்.

வசியம்

எருமையில் கடித்த அட்டையை யெடுத்து இரசம் பூசி மாமரம் உளுத்தபொடியும் சேர்த்து, பந்நீர்விட்டு மைபோலரைத்து சிமிளில்வைத்து வாழைப்பழம், தேங்காய், சூடங்கொளுத்தி, சாம்பிராணி புகைத்து வசி வசியென்று (1128) உரு கொடுக்கவும் மேற்படி மையை யெடுத்து புருவத்தில் தடவி இஷ்டப்பட்ட ஸ்திரீ முன்னே சென்று அவள் முகத்தைப் பார்த்து வசிவசி யென்று ஏழு தடவைசொல்லி நாம் முன் நடக்க அவள் பின்தொடர்ந்து வருவாள்.

வசியம்

புளியமரத்தில் இருக்கின்ற கருப்பல்லியை அடித்து உலர்த்தி எருமரத்து இந்த விறகு கொண்டுவந்து சுட்டு பொடிசெய்து தலை சிவந்த ஒந்தான் இரத்தம்விட்டு குழைத்து குண்டுமணி யளவு குளிசம் உருட்டி நிழலிலுலர்த்தி வாழை யிலைமேல் வைத்து எலுமிச்சம்பழம், மல்லிகைப் பூ, வாழைப்பழம், இளநீர் இதுகள் வைத்து சாம்பிராணி புகைத்து நமசிவயென்ற (1128)

உரு கொடுக்கவும். பின்னடி நல்லெண்ணெயில் குழைத்து வெற்றிலையில் தடவிக்கொடுக்க வசிய மாகிப்போகும். தாய்ப்பாலி லுரைத்து நெற்றி யில் திலதமிடலோகவசிகரமும்; தேனிலுரைத்து மேல்தடவிப்போகவழக்குவெல்லும்கைகண்டது.

வசியம்

மைவிழியாடன்னை மயக்கவேணுமென்றால் ஈப்புலியும், ஈயும், ரசமும், ஐவிரளி சாறுவிட்ட ரைத்து மைபோலெடுத்து சிமிளில் வைத்து பசு வின் பாலும், வாழைப்பழம், மல்லிகைப்பூ பந்நீர் வைத்து சாம்பிராணி புகைத்து சுவாகாவென்று (1128) உரு கொடுத்து மையெடுத்து தன் விந்தா வது, அல்லது தன்னுடைய நீர் எடுத்து சட்டி யில் ஊத்தி மூணுகல்லின் பேரில் சட்டியை மேலேவைத்து நெருப்பு எரிக்க உப்பாகிவிடும். மேற்படி உப்பைக் கொஞ்சமெடுத்து இந்த மை அரைக் குண்டுமணி அளவு சேர்த்து குழைத்து தின்கிறபதார்த்தத்தில்கொடுக்கஉடனேவருவாள்.

வசியம்

புனுகும், சந்தனமும், பன்னீர்விட்டு மை போல் அரைத்து அவள் நீரில் குழப்பி சிமிளில் வைத்து மல்லிகைப்பூ ரொம்பவைத்து சிவநமய வென்று (1128) உருகொடுக்க சித்தியாகும். ஷை மையை கொஞ்ச மெடுத்து புருவத்திலாவது, தலையிலாவது தடவ இவளைக் கண்டபேர்கள் போகமாட்டார்கள்; கேட்டவைகள் கொடுப்பான்; தனக்கடிமையாவான்; மேற்படிமையில் கொஞ்சம் எடுத்து கையில்தேய்த்து காலில்தடவ யாரிடமும் சேர அவன்விட்டுபிரியான்மறுமாதரை இச்சியான்

### வசியம்

மூலாமென்னி வேரை ஞாயிற்றுக்கிழமை நமசிவய என்று சொல்லிப் பிடுங்கி வேரைமட்டும் அவள் வீட்டுக்கு விலக்கமாகிய மாதவிடாயில் புறட்டி அல்லது அவளுடைய நீரில் மூன்று நாளைக்கு ஊறப்போட்டாவது வேரையெடுத்து சிரங்கை பசுவின் நெய்யில் போட்டு அடுப்பில் சிவக்கக் காய்ச்சி அந்த நெய்யை கொஞ்சம் தின்கிற பதார்த்தத்தில் தின்னகொடுக்க அவன் சீவன் போனாலும்விடான்; எதுகேட்டாலும் கொடுப்பான். கைகண்டது.

### தேள் கடிக்கு மருந்து

தேள் கடித்தால் நீரில் வசம்பை உரைத்து கடிவாயில் பூச தீரும்.

### தேள் கொட்டினதற்கு மருந்து

ஒருகரண்டியில் நல்லெண்ணெயிட்டு சுட வைத்து எண்ணை கொதிக்கிறபோது வெற்றிலையைக் கசக்கி அதில் பிழிந்து அந்தபுகையை பிடிக்க விஷந்தீரும்.

### பெண்களுக்கு தகுடு போடுகிற விபரம்

ஆறுகோடு நேரேகீரி குறுக்க ஆறுகோடு போட்டு, கோட்டு மூலையில் சூலம்போட இருபத்தைந்து வீடு ஆகும். முதல தலைப்பு வீட்டில் நற்கோணம்போட்டு நானவும் பத்துப்போடவும் மறுவீட்டில் ||ரைகோணம்போட்டு மானவும் பதினெட்டும் போடவும் மறுவீட்டில் அறுகோணம் போட்டு வானவும் ஆறுபோடவும் கடைசி வீட்டில் வட்டம்போட்டு யானவும் வீனவும் போட

வும் பின்னிட்டு நடுவணையைப் பிடித்து மாறவும் மாறிப்பார்க்க அன்பத்தொரு சக்கரமாகும். சிதம்பரமாச்சுது இதுதான் சிதம்பரம் இதைதங்கத் தகடு, வெள்ளி, தாம்பாம் இந்தத்தகட்டில் எதிலாவது ஒன்றில் இந்த எழுத்தை முறையிடாமல் எழுத்தாணியால் வரைந்து வெற்றிலைப்பாக்கு, சாம்பிராணி, வாழைப்பழம், தேங்காய், 17-எலுமிச்சம்பழம், மல்லிகைப்பூ, அத்தர் பந்நீர் இதுகள் முனனுக்குவைத்து தகட்டை மல்லிகைப்பூ மேலவைத்து கிழக்கு ஈசானிய முகமாயிருந்து சாம்பிராணி புகைத்து மூன்று புது கலசத்தில் தண்ணீர் நிறையவைத்து நமசிவயவென்று (1128) உருகொடுத்து டை தகட்டை சுருட்டி மெழுகு துண்டால்பொதித்து தங்கத் தாயித்தில் அல்லது வெள்ளி தாயத்திற்குள் அடைத்து தண்ணியை பெண் பிள்ளையின் முன்னேவைத்து மூன்று தரம் முகத்திலடித்து மூன்று மொணர் குடிக்கும்படியாய்ச் செய்து மீதி தண்ணியை முகமும் கையும் நன்றாய் சுத்தி செய்து பின்பு தாயித்தை பெண் கழுத்தில்போடவும். அல்லது கையில் கட்டவும். இப்படிக்குச் செய்தால் இதற்கு விலக்கு, வஞ்சனை, பில்லி, சூனியம், ஏவல், கடப்புதோஷம், திட்டு முறைப்பாடு, கண்ணேறல், நாவேறல் அஞ்சப்பேய், சந்திப்பேய், காலைப்பேய் மாலைப்பேய், கழுவன், முனியன் ராகாச்சியப்பேய், காட்டேரி துர்க்கை பிரமராக்ஷச பிசாசுகளாயிருந்தாலும் இப்பேர்ப் பட்டதெல்லாம் நீங்கிவிடும்; கெர்ப்பம் தரிக்கும் அழகுண்டாகும்.

வசியம்

இதில் எழுதியிருக்கிற விபரப்படி முறை தவறாமல் இந்தப்படி செய்யவும். இதை ரொம்ப விளம்பரமாக சொல்லியிருக்கின்றது. அநேக சாஸ்திரங்களில் இச்சக்கரத்தை சுத்துகழட்டாய் மறைவாகச்சொல்லி யிருக்கிறது. அந்த சாஸ்திரங்களில் செய்யக்கூடாத வேலையைசெய்கிறது மகா பிசகு. இதில் கண்டு யிருக்கிறது யாவர்களுக்கும் விளங்கும்படியாகச் சொல்லி யிருக்கிறது. இந்தமுறை தவறிவிடாமல் செய்தால் மேற்சொல்லியபடிக்கு நடக்கும். இதற்கு கீழடியில் சடாட்சரத்துக்குடையவிபரம்சொல்லிவருகிறது.

விருத்தம்

வீசினேன் ஆறுவரை குறுக்கேகீறி விளங்கவே ஆறுவரை நேரேபேச்சி, பேசினேன் இருப்பத்தஞ் சுரையுமாச்சு பிசகாமல் மூனேதோறும் சூலம்போடு, நேசினேன் முதலரையில் நாலு கோணம் நிசமான நகாரமொடு அகாரங்கூட, பூசினேன் அய்யோடு வகாரம்தோணும் புகழான லெக்கமது பத்துமாமே.

ஆமப்பா அடுத்தரையில்பிறைதான்கோணம் அடைவான மகாரமொடு இகாரங்கூட, தாமப்பா கிலியோடு வகாரந் தானும் தயவான லெக்கமது பதினெட்டாகும், வாபப்பா அடுத்தரையில் முக்கோணந்தான் வளமான சிகாரமொடு வகாரந் தானும், நேமப்பா சவ்வுடனே நகாரந்தொட்டு நலமான லெக்கமது பதினுலாகும்.

ஆமடா இதனருகே அருகோ ணந்தான் அடைவான வகாரமொடு யகாரந்தானும், தாமடா

ரெங்குடனே யகாரந்தானும் தயவான லெக்கமது ஆறுமாமே, வாடாயிதனருகே வட்டம்போடு வடமான மகாரமொடு ஓங்கா ரந்தான், நாமடா அரியோமென்று நாட்டி நலமான அகாரமொடு லக்கம்மூன்று.

மூன்றான நடவணையை யெடுத்து மாறி மூன்னுமைய சக்கரமோ யிருபத்தஞ்சி, நன்றான சூலத்தில் இடைகள் தோறும் நாயகனே நீயும் ஸதிரீயுங் கண்டுமொட்டு, வங்கான சூலமுனை ஸ்திர ரெங்கையோடு பண்பான திருபட்ட மிழந்தான் மூன்று, உத்தமனே திருவட்ட மிதழி ரெட்டே.

எட்டான திருவட்ட மெண்ணுக்கப்பால் இத மான நடுவட்டம் முதலாய் மாறி, கட்டான அகார முதல் சக்கரமட்டும் தனிவாக அன்பத்தியொன்று மாச்சு, திட்டான உபரேகை நாலுவாசல் கீழ் வாசல் கணபதிக்கு தங்கும் நாட்டு, நாசின்மேல வாசநடுவான பீசம் நாயகனே வங்கென்று நாட்டி டாயே, நாட்டியதோர் பிரிதிவின் வாசம் பீசம் குணமாக சம்மென்று குறித்துப் போடு.

இந்தப்படிக்கு தாம்பர தகட்டினல் இந்த சக் கரத்தை வரைந்து ஈசானிய முகமாய் வைத்து பந்நீரும் அத்தருந் தெளித்து ஊதுவத்தி கொளுத்தி மல்லிகைப்பூ வைத்து சாம்பிராணி புகைத்து நமசிவய வென்று (1128) உரு செபிக்க ஆடுந்தம்பனம், மோகனம், உச்சாடனமோகனம், வசியம், அட்டமாசித்து அறுபத்திநாலும் இந்த தகட்டினல் ஆடலாம். வழக்குக்கு போகிறபோது இந்த தகட்டை முன்னே வைத்து சாம்பிராணி புகைத்து வயநமசியென்று (12) உரு கொடுத்து

தகட்டை எடுத்து இடுப்பில்கட்டிக்கொண்டுபோக வழக்கு வெல்லும் ராஜாக்களாவது ஸ்திரீக ளாவது மற்ற பேர்களாவது நாம் சொன்னபடி பேசவேணுமென்றால் ஷை தகட்டை முன்னே வைத்து நமசிவயவென்று சாம்பிராணி புகைத்து (1128) உரு கொடுத்து ஷை தகட்டையெடுத்து இடுப்பில் கட்ட உடனே நடக்கும் இந்த மாதிரி யாக எழுதி செபம்செய்து தகட்டை வைத்துக் கொள்ள வேண்டியது இந்த விபரம் விடாமல் செய்யவும்.

## பிள்ளையில்லாத பெண்களுக்கு கெர்ப்பமுண்டாக மருந்து

விளக்கெண்ணை படி அரை, மிளகு, திப்பிலி, ஓமம், வெள்ளை வெங்காயம், வசம்பு, கஸ்தூரி மஞ்சள், சாதிக்காய், கருவண்டு, கருங்கம்பளி வகைக்கு விராகனெடை 3-கூட்டி பொடித்து எண்ணையில் போட்டுக் காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்து தினம் ஒரு கரண்டிவீதம் முப்பதுநாள் காலமே கொள்ளவும் கைப்பு புளிப்பும் தள்ளவும் மறுமாதம் பிள்ளை யுண்டாகும் கைகண்டது.

## திரளாத பெண்களுக்கு

பருத்தி வடக்குநோக்கி போகிறவேரை வெட்டி வந்து கழுவிப்போட்டு பசுவின்பாலில் அரைத்து எலுமிச்சங்காயளவு மேற்படி பாலில் கலக்கி ஏழுநாளைக்கு கொடுக்கவும். செம்பரத்தம் பூவை எலுமிச்சங்காயளவு பாலில் கலக்கி ஏழு நாளைக்கு குடிக்க திரளாத பெண் திரளும்.

---

அகஸ்திய முனிவர் அருளிய

# சந்தன நூல் சாஸ்திரம்

காப்பு

செந்தமிழ் நூலோர்முன்னோர் சேரவே யுரைத்த வண்ணம், சந்தனக் கயிறு நூலே தானவா கயிறு சேர்த்து, பந்தமாய் லெக்கம் நூறும் பத்துடன்ரெண்டு மொன்றும், முந்தவே மூக்கால்போட்டால் முறைதரும் நன்மை தானே.

## 1—1—1 அகஸ்தியன்

பூமியிற்கயிறுபோட பொருந்தவே கடிகமாகும், நாமமாய் வொன்றாய்வந்தால் நலமுடன் நன்மை யாகும், தேவர்கள் சிந்தையாகும் திருந்தவே போனார் மீள்வார், பூமிந்த நூலினாலே ஏற்றவர் வுறவுமாவார்.

பொன்பொருள் வந்துசேரும் போதவே கருமம் நன்றும், தன்கிளை கூட்டமுண்டாம் தருமமே தழைத்துவாழும், வன்பகை யில்லைதானேவாழ் வதுமெத்தவுண்டாம், அன்புகள் மெத்தவுண்டு வகஸ்தியன் தலைக்கண்டாலே.

வசனம். ஒரு தேவதையாலே பிசகாயிருக்கும் அந்த தேவதைக்கும் சந்தோஷம் பண்ணி வைக்கவெகு நன்மை கிருஷ்ணசுவாமி ரட்சிப்பார் பயமில்லை. துடியிடை சேர்வாள் பால் பழம் புசிக்கப்பட்ட தெய்வமுண்டு அதனாலே காரிய

மூண்டு நினைத்தகாரியம் சந்தோஷங் கொள்ள வேண்டும் உத்தமம் நன்று.

## 1—1—2 சிவாலயம்

ஒன்றுடன் ஒன்றும்ரெண்டும் வந்துமே யுதிக்குமாகில்,வேண்டிய செல்வமுண்டாம் விரும் பிய காரியங்களுண்டாம்,வேண்டியமழையுமுண்டு வேந்தரால் வழக்கு வெல்லும், மனதினில் நினைத்ததெல்லாம் வந்து கைகூடுமென்றே.

தலமது கருமம் நன்றாய் வாழ்வது கேடுமில்லை, உலகினில் பொன்னுஞ்சேரும் உத்ததோர்மெத்த நன்மை, நலமது கருமந்தானே நாள்தோறும் வெற்றியாகும், சிலபொருள் வந்துகூடும் சிவால யங்கள் கண்டாக்காலே.

வ-ம். தான் நினைத்த காரியமெல்லாம் பலிக் கும் ஒரு தேவதையாலே சகாயமுண்டாயிருக்கும் அயோத்தியாபுரிவாசம் ஐயனார் பந்திக்கூட்ட மூண்டு ஆதிபெரிய தெய்வ ஜெயமுண்டு பொரு ளைத தொட்ட காரியம ஜெயமாகும் மகா உத்தமம் நன்று.

## 1—1—10 குயவன்

உரைத்திடும் ஒன்றும் ஒன்றும் பத்துவந் துதிக்குமாகில், திரத்தினில் நினைத்ததெல்லாம் சேரிடச்செய்வார் பொல்லார், கருத்துடனொருவ ராலே கனமுள்ள பயமுமாகும், வருந்திய தீமை யாகும் வஞ்சகம் ரொம்பவுண்டாம்.

விரைந்தது வினையுமில்லை வேண்டியஜெயமு மில்லை, உரைத்ததோர் பிள்ளையில்லை ஓங்கிய

நன்மை நிதாம், நிறத்திலே நிற்கவேண்டாம் திங்குமேல் திங்குமாகும், முறைத்தலைப் பேய்வந் தெய்துங் குயவனைக் கண்டாக்காலே.

வ-ம். மனநோக்கி ஒருயிடத்திற்குப்போக சத்துருவாய் ஒருவன் வருவான் அவனை நம்ப வேண்டாம் வினையில் பொல்லாப்பு வரும் நினைத்த காரியத்துக்கு இடையூறுவரும் ஒருவன் உறுத்தாளியாக வருவான் அவன் பேச்சை நம்ப வேண்டாம் ஒரு காரியமுமாகாது நித்தம் சண்டையாகும் பிரமதேவதைக்காகப்பட்ட பெரிய தேவதையால் குறையுண்டு அவர்களோடுபந்திசேர்ந்து மதுமாமிசம் நடப்பி வைக்கப்பட்ட தெய்வமுண்டு படுகளத்தில் மாண்டதெய்வமுண்டு இவர்கள் ஆதரித்தால் கைகூடும் உத்தமத்தில் மத்திமம்.

## 1—1—100 அநுமான்

உதித்திடும் ஒன்றுமொன்றும் ஒன்றும்வந்துதிக்குமாகில், பத்திய கருமம்நன்றும் பல்வினை நீங்கிவாழும், அடுத்தவர் பகையுமில்லை அரவுடனுறவு முண்டாம், விருத்தியாய் செய்ததெல்லாம் விரைந்துகை கூடுமென்றே.

தோணி பயமுமில்லை திருவுடன் செல்வமுண்டாம், ஓரணி செல்வமுண்டாம் உயிர்ச்செல்வம் வந்துசேரும், தாரணி கருமம் நன்றும் தயவுகள் நன்றதாகும், ஆரணி குறிப்புமுண்டு அநுமானைக் கண்டாக்காலே.

வ-ம். தான் எது நன்மை நினைத்தாலும் சடுதியிற் கைகூடும், தொடுத்த காரியமெல்லாம்

நன்மையாகும், மழையுண்டு, பகைவருறவாகும். தெய்வமானல் கருப்புக்கூட்டம் அவனலே காரியங்களாகும் ஆண்பிள்ளை யுண்டாம் உத்தமம் நன்று.

## 1—2—1 பெருமாள்

உண்மையாம் ஒன்றும்ரெண்டும் ஒன்றும்வந்துதிக்குமாகில், நன்மையாய் வியாதிதிரும் நலத்துடன் கருமம்நன்ருப், பெண்ணுடன் தனமுங்கூடும் பேணிய பொருளுண்டாகும், திண்ணமாருறவுகூடும் சேர்ந்திடும் பொருளுந்தானே.

வருவதோர் கருமம் நன்றும் வாழ்வது வெற்றி யுண்டாம், பருவமாய் பயமுமில்லை பண்புடன் வெற்றியாகும், இருபத்தொரு நாள் தன்னில் இத்திய கருமம் நனறும், திருமணி மாலை மார்பன திருமாலைக் கண்டாக்காலே.

வ-ட. ஒருமங்கிலிய சோபன கலியாணம் கூடவேணும். தோடுத்த காரியம் நன்மையாகும். தெய்வமானல் ராமதாரி அளவு பண்ணினல் காரியமாகும். நினைத்தகாரிய மனுகூலமாகும். மகா வுத்தமம் நன்று.

## 1—2—2 துற்கை

இசைந்திடும் ஒன்றும் ரெண்டும் ரெண்டும் வந்துதிக்குமாகில், வசையற நினைத்ததெல்லாம் வந்து கைகூடுமென்ருர், இசைந்திட நினைத்ததெல்லாம் இடையூறு வருவதில்லை, துசைதருஞ் செல்வமுண்டாம் தூரவே போனா மீள்வார்.

ஓங்கிய பொருளு முண்டாம் உயர்ந்ததோர் செல்வ முண்டாம், தேங்கிய கருமம் நன்றும் சேரிடஞ் செல்வ முண்டாம், பாங்கதாய் பதியு முண்டாம் பயமில்லை நன்மை யாகும், தாங்கிய துற்கை கண்டால் சம்பத்து மிகவுண்டாமே.

வ-ம். முன் ஆதரிக்கிற தெய்வத்திற்குப் பூசைபண்ணிவைக்க சகல காரியமுங் கைகூடும். பாக்கிய முண்டாம். பெண் தேவதையைச்சேர்ந்த துண்டு இவர்களால் காரியங்கள் முப்பத்தொரு நாளையில் யோகமுண்டு உத்தமம் நன்று.

## 1—2—10 அரசன்

ஓதிய ஒன்றும் ரெண்டும் பத்துவந் துதிக்கு மாகில, சேதியாம் நினைத்ததெல்லாம் செயலுடன் நன்மையில்லை, சூதனில் மாற்றானுண்டு சொன்ன து விகடமாகும், சேமாம் விதியினுதே தெரிந் துடன் சாந்திசெய்யே.

பெருகிய கருமமாகும் பேணிய நன்மையில்லை
இருதயம் தீமையாகும் யிருநெரி யின்பமில்லை
கருதிய பொருளுஞ்சேரும் காரியம் பலிப்புமில்லை
அருகிய அரசன்கண்டா லாவது மில்லைதானே.

வ-ம். ஆருடனும் சேரவேண்டாம். தான் வல்லவனுக யிருந்தாலும் அவனைத்தொட்டு பொல்லாப்புவரும். அவன்பேச்சை நம்பவேண் டாம்; அதனாலே சேதம் வரும். தெய்வம்கறுப்பு அதின் குறையுண்டா யிருக்கிறது. அணைவுதல் பண்ணினுல் காரியமுண்டு மத்திபம்.

## 1—2—100 செக்கான்

வல்லதோர் ஒன்றும் ரெண்டும் நூறும்வந் துதிக்குமாகில், நல்லவர் பொல்லாப்பாகும் நாசமாம் நினைத்த தெல்லாம், தொல்லையுஞ் சிறிதுண்டாகும் தூரமே போனார்மீளார், வல்லமை பேசவேண்டாம் வருவது அறிந்துசெய்யே.

ஆனது அழிவுண்டாகும் ஆளனைப் பிரிவுமுண்டா போனவர் மீளமாட்டார் பூமியும்வேறதாகும் [ம் மானிடர் உறவுமில்லை வையகந் தூரப்போமோ சினியுங் கசப்பதாகும்செக்கானைக் கண்டாக்காலே.

வ-ம் எதுகாரியம் நினைத்தாலு மையமுண்டு, உறவாகாது. நன்மை சொன்னாலும் பொல்லாப்பு வரும். துரோபதையம்மனை துகிலுரிந்தவிடம் இருளாகப்பட்ட தெய்வத்தோடே யருளிலே வெகு நாளாக ஆதரிக்கப்பட்டதுண்டு. ஆகாது மத்திபம்.

## 1—10—1 அருந்துதி

ஒக்கவே ஒன்றும் பத்தும் ஒன்றுவந் துதிக்குமாகில் சிக்கென நினைத்ததெல்லாம் செல்வமாய் வந்து கூடும், தொக்கதாய் படையும் வெல்லும் தொடுத்த காரியமுமாகும், பக்கவெள் ளாண்மை சேரும் பண்புடன் பலிப்பதாகும்.

போனதோர் கருமம் நன்றும் போமிதும் நன்மையாகும், வானமு மழையு முண்டாம வான் பொருள் வந்தே நேரும், யீனமும் மிரக்கமாகும் மியலுடன் வாழ்வார் பிள்ளை, ஆனதோர் பிணியும் போகும் அருந்துதிக் கண்டக்காலே.

வ-ம். தான் நினைத்த காரியம் உடனே பலிக்கும். ஒருவனாலே சகாயமுண்டு. செட்டு வெள்ளாமை பலிக்கும் இராஜாக்களாலே வெகுமதி வரும். தருமராஜாக்கள் ஐந்துபேரும் நச்சுப் பொய்கையில் நீர் குடித்தவுடனே சுவாமி வந்து எழுப்பினயிடம் அகவிலே ஏறவிற்கும் வீரியமான பெண் தேவதையின் குலையில் சேர்ந்த கூட்டம் களறி உண்டு. உத்தமம் நன்று.

## 1—10—2 சூரியன்

மணத்துடன் ஒன்றும் பத்தும் ரெண்டுவந்துதிக்குமாகில், இனத்துடன் சண்டையுண்டாம் இசையவே செம்பொன்னுண்டாம், தனத்துடன் துலையேபோனற் சலுதியில்வந்துசேர்வார், கனத்திலே மழையு முண்டு கனதெய்வ சகாயமாமே.

மாரியு மழையுமுண்டு மக்களும் பொருளுமுண்டு
வீரிய மானபோரில் வெற்றியு மிகவுண்டாகும்
காரியஞ்செய்வதாகும் கனபொருள் வந்துசேரும்
சூரியன் தன்னைக்கண்டால்சுகமதாய்வாழ்வர் தாமே

வ-ம். தூரத்திலே போனவர்கள் வந்துசேர்வர்; சகாயமுண்டு தெய்வத்தினலே மிகவும் காக்ஷியுண்டு. உறவுகூடும் நினைத்த காரியம் நன்மையாக விருக்கும். ஏதுகாரியம் நினைத்தாலும் கைகூடும். திரியோதினை பக்ஷி எடுத்துக் கொண்டு போகையில் அருச்சுனன் திருப்பினவிடம். வன்கொலிற் சேர்நத கறுப்பு உண்டு. அவர்களை ஆதரிக்க மிகு சந்தோஷம். நினைத்த காரியம் பதினைந்து நாளையில் ஆகும். உத்தமம் நன்று.

## 1—1—10 இந்திரன்

வாடிய ஒன்றும்பத்தும்பத்தும்வந்து திக்குமாகில்
நாடிய கருமம்நன்றும் நலமுடன் ஜெயமுமாகும்
பாடிய சனியும்நீங்கும் பாவமும சிறைநீங்கும்
தேடிய தெய்வத்தாலே சேர்பகை யுறவதாகும்.

முந்தினவினையுமில்லை மூண்டதோர்பகையுமில்லை
வந்திடும்நன்மைதானேவாழ்வதுமிகவுண்டாகும்
சந்ததந் தன்னுதாகுஞ் சாலவே நன்மையாகும்
இந்திரன் தன்னைக்கண்டா லீவதே நன்மைதானே

வ-ம். எது காரியம் நினைத்தாலும் தான் ஆதரிக்கிற தெய்வத்திற்கு குளிர்ச்சிபண்ணிவைக்கிறேனென்று பிரார்த்தனை பண்ணிக்கொண்டால் காரியஞ் செயமாகும் ; சத்திக் கணபதி பெரிய தேவதையாகும் ; மகா உத்தமம் நன்று.

## 1—10—100 வேதாளம்

முந்தியஒன்றும்பத்தும் நூறும்வந்துதிக்குமாகில்
சிந்தையிலாறுந்தீதுசேர்ந்தவர்சலிப்புமுண்டாம்
வந்ததுபயிறுமில்லை வறுமையில்வழக்கமாகும் [ம்
முந்தினபிணிதீராதுமுறையுடன்நாள்தான்செல்லு

மாதாவும் பிதாவும் நோயாம் மன்னவர் பகையு மூண்டாம், தேசங்கள் மெத்தவுண்டாம் சேர்ந்திட்ட பொருளும் போகும், வேதாளம்தன்னைக் கண்டால் வினைகளும் விளையுந் தானே.

வ-ம். பிணி நாட் செல்லும் யாது காரியம் நினைத்தாலும் உறவு பகையாகும் நல்லது சொன்

ளுலும் பொல்லாப்பு வரும் நினைத்த காரியங் கைகூடாது அடுத்தவர் பகையும் சிளுகுமுண்டு மூன்னும் பகையு முண்டு ஆகாய வீரியமான அந்தரப்பட்சம் இருக்கிறபடியினுலே இவனை அணைவுதல் பண்ணிஞல் காரியம் அனுகூல மாகும் மத்திபம்.

## 1—100—1 பூரணகும்பம்

உலகினில் ஒன்றும் நூறும் ஒன்றும்வந் துதிக்குமாகில், துலேவில்லா நன்மைசேருந்துதிக் கின்ற பலிப்பு முண்டாம், குலத்தினில் நினைத்த தெல்லாம் குறிப்பதாய் கையிற்கூடும், துலேயினிற் போனூர் தானும் சுகமுடன் வந்துசேர்வார்.

காரணந் தினமு முண்டாம் கருதியொரு பொருளுமுண்டாம், தாரணி தன்னதாகும் தன் கிளை கூடசேர்வார், பூரண கும்பங்கண்டால் பொருளுமேல் பொருளுஞ் சேரும், கூரணி தெரி சனைகண்டால் காரியங்கள் சித்தியாமே.

வ-ம். நினைத்தது உடனே கூடும் நன்மை யாகும் தான் ஆதரிக்கிற தெய்வத்திற்கு சேலை வாங்கி வைத்து சிறப்பு நடப்பித்து வைக்கிறே மென்று வணங்கிக் கொள்ளவும் தேவதை பிச குண்டு நோயும் பிணியும தீரும் அங்காள பர மேஸ்வரியான தெய்வம் அம்தாலே அட்டங்க ளறியுண்டு அருகன் நாளையிலே யோகமுண்டாம் அப்படிக்கொத்த தேவியைப் பாத தெரிசனே பண்ணிஞல் காரியங்கள் சித்தியாகும் மகா உத்த மம் நன்று.

722

## 1—100—3 வீரசூரன்

ஓங்கிய ஒன்றும் நூறும் மூன்றும்வந் துதிக்குமாகில், ஏங்கிய கருமமெல்லாம் இசையவே நன்மையாகும், தாங்கிய யிறையவன்றன் தயவினாலருளுண்டாகும், தூங்கிய வருமைதீர்ந்து துன்பமும் நோயும் தீரும்.

ஓங்கிய கருமம் நன்றும் ஒன்றுதல் வந்து சேர்வாள், தீங்கது ஒன்றுமில்லை சேர்ந்திட நன்மையாகும், பாங்குடன் தெய்வமுண்டாம் பாலுடன் சோறுமுண்டாம், வீங்கிய பிணியுந் தீரும் வீரனைக் கண்டாக்காலே.

வ-ம். ஒரு பெண்ணாலே கதித்த செல்வமுண்டாம் உத்த பகையாயிருக்கிற பெயரும் உறவாவார் நல்ல விசேஷங் கேட்கவேணும் ஒரு பெண்ணாலே கனபொருள் வந்துசேரும் செல்வமுண்டாம் மங்கள கலியாணம் சடுதியிற்கூடும் வீரியமாம் நிற்கிறவர்கள் பேரால் நன்மையுண்டாம் உத்தமம் தன்று.

## 1—100—10 கற்பக விருக்ஷம்

உதித்திடும் ஒன்றும் நூறும் பத்துவந்துதிக்குமாகில், முந்திய நன்மையுண்டாம் முதலான செல்வமுண்டாம், வெதுப்பிய வினையுமில்லை வேந்தரால் வழக்குமில்லை, செழிப்புடன் செல்வமுண்டு செந்நெல்லும் விளைவுண்டாமே.

விரைப்பொருள் வாழ்வுசேரும் வேண்டிய கருமம்நன்றும், கைப்பொருள் வந்துசேரும் கண்

டவர் மதிக்க வாழ்வார், இப்பதிதனக்கு நன்மை யின்பமும் குணமுமுண்டாம், கற்பகவிருக்ஷம் போல காரியம் பலிக்குந் தானே.

வ-ம். இராஜா கலகமில்லை வியாபாரம் பலிக்கும் நோய் தீரும் உறவாகும் நல்ல விஷயம்வரும் ஒரு பெண்ணாலே பொருள் வந்துசேரும், கலியாணங்கூடுமே பிள்ளையுண்டாம் பிணிதீரும் தேவதைக்குப்பூசைசெய்யவும் வீரலட்சுமி சுகவாலயம் வாசலிலிருப்பாள் நற்கூட்டம் ஆண்டியிருளர் நாய் கப்பரைக்குடையவர் அக்கினி விரேசன்பால் பஞ்சாட்சரம் போசிக்கப்பட்ட பெண் தேவதையுண்டு இவர்களுக்குப் பிரார்த்தனையுண்டு அது நடப்பித்தால் நினைத்த காரியமெல்லாம் இருபத்தைந்து நாளைக்குள்ளே ஜெயமாகும் உத்தமம் நன்று.

## 1—100—100 நக்ஷத்திரம்

ஒத்தையாய் ஒன்றும் நூறும் நூறும் வந்துதிக்குமாகில், உத்துமே நினைத்ததெல்லாம் உயர்சிவனருளாற் கூடும், சுத்தமாய் நினைத்ததெல்லாம் சுகமதாய் வந்துகூடும், வெத்தியாய் பிணியுந்தீரும் வேண்டிய தெய்வத்தாலே.

மிக்கவே கருமம்நன்றும் வேண்டிய பொருளுமுண்டாம், தக்கதோர் மழையுமுண்டு தோரணி கலக்கமில்லை, திக்கெல்லாம் நன்மையாகும் சேர்ந்தவர் வுறவதாகும், பக்கநட்சத்திரங் கண்டால் பாலுடன் சோறுண்டாமே.

வ-ம். தெய்வத்திற்கு குளிர்ச்சிபண்ண யாது காரியம் நினைத்தாலும் வந்துகூடும் தேவதை சகாயமுண்டு காமதேவன் சிவகிளைதேவி கடாக்ஷமுண்டு சந்திரரேகை ரெண அக்கினி வீரபத்திர சுவாமியுடைய ஏழு முகமுண்டு வன்மூலையில் சேர்ந்த இடமுண்டு இவர்களுக்கு ஒரு நேர்த்தி உண்டு நடந்தால் நோய் பிராணிகள் தீர்த்து நினைத்த காரியம் ஜெயமாகும் உத்தமும் நன்று.

## 2—1—1

இசையவே இரண்டும் ஒன்றும் ஒன்றும் வந்துதிக்குமாகில், திசையினில் நினைத்ததெல்லாம்சிவனருளாலே வாழும். கசையுற விழுத்துபோன கனபொருள் வந்துகூடும், வசையுள்ள கள்ளராலு மற்றவர் பகையும் நன்றே.

வ-ம். தேவதைக்குப் பிரார்த்தித்துக்கொண்டு போக நினைத்த காரியமெல்லாங் கைகூடியசெல்வமுண்டாகும் உத்தமம் நன்று,

## 2—1—2 ராட்சதன்

சடுதியில் இரண்டும் ஒன்றும் இரண்டும் வந்துதிக்குமாகில், கெதியதாக கருமமாகும் கிருபையுமில்லை யென்றே, வருவது தெய்வத்தாலே வந்தவர் திமை சொல்வார், சடுதியில் மழையு மில்லை சலிப்பது மிக வுண்டாமே.

பாலனும்நோவதாகும் பக்ஷமும்பயமுமாகும்
சீலமுங்குணமுமில்லை செல்வமுமில்லைதானே

கோலமுந்துணமுமில்லை குறிப்புடன் செல்வமில்லை
காலனை கண்டபோதே கனத்ததோர் பகையுமுண்டே

வ-ம். நினைத்த காரியம் கைகூடாது உறவு பகையாகும் அலைச்சலுண்டாகும் கபாலமுண்டு திரௌபதையை துயிலுரியக்கூட்டிவரச்சொன்ன விடம் கடுப்புத்திரிய பந்தம் பிடித்து கோபாக்கினியான தெய்வம் திருமணியுடை குறையுண்டு சலிப்பு நோயுண்டு ஆகாது மத்திபம்.

## 2—1—10 இராவணன்

இணங்கிய இரண்டும் ஒன்றும் பத்தும் வந்துதிக்குமாகில், கணமுடன் சிலுதுண்டாங் காரியம் பலிப்புமில்லை. வணங்கிய பொருளுமில்லை வருந்தினர் சகாயமில்லை, குணமங்கிலி காரியாலே குறிப்பிடும் விளையுந்தானே.

திருவுடன் பெண்ணும்போகும் திங்குமேயதிக முண்டாம், இருநிதிகாணும்போகும் இயலுடனழிவதாகும், கருதியபொருளும் போகுங் கனமழை பயிருமில்லை, இருவினை வந்துசேரும் இராவணன் றலைக்கண்டாலே.

வ-ம். ஒரு பெண்ணாலே சிலுதுண்டாகும் உயிர்ச்சேதம் வரும் உறவு பகையாகும் படுகளத்தில் மாண்டது அதில் சேர்ந்து ஊர் கொடுத்தது உண்டவன் குடையுண்டு ஆவேசமாக யிருக்கிறன் கேட்ட காரியமாகாது.

2—1—100

ஊக்கமாய் இரண்டு மொன்றும் நூறும்வந் துதிக்குமாகில், ஆக்கமாய் நினைத்ததெல்லாம் மகன்றிடும் நன்மையில்லை. வாக்கினுற் சொன்ன தெல்லாம் வந்திடும் நன்மையில்லை. பாக்கியங் கைகொடாது பண்புளோர் பொல்லாப்பாகும்.

வ-ம். பகைவந்துகூடும் நன்மையில்லை நல் லாரையும் பொல்லாப்பாகும் ஒருவரையும் நம்ப வேண்டாம் உற்றூர் பகையாயிருக்கும் நன்றல்ல மத்திபம்.

2—2—1 நிறுதி

இசைதரும் இரண்டும் ரெண்டும் ஒன்றும் வந்துதிக்குமாகில், பகைவதா லொருவனுலே பல பொருள் வந்துகூடும், திசையினில் நினைத்ததெல் லாம் சேரவே வந்துகூடும், விசையதா யுறவுண் டாகும் மிக்கவெள்ளாமை நன்றே.

கருதியவினையும்போகும் காரியமிகவுண்டாகும்
உறுதியாய்பொருளுங்கூடும் ஓங்கியகருமம்நன்றும்
சுருதியாய்கேட்டதெல்லாம் சுகம்பெறவந்துகூடும்
நிறுதியைக்கண்டாக்காலே நிச்சயமவாழ்வுதானே

வ-ம். ஊர்படைவெல்லும் நினைத்த காரியம் பழுதாகாது வனத்திலே யறுந்த மாங்கனி பொருந்தவிடம் பலத்த தேவதை இருளனுல் நன்மையுண்டு கருப்புத் தேவதைக்கு சூரியனுக்கு திருபால் பிரார்த்தனை யுண்டு நடநதால் நினைத்த காரியம் 2 கைவசமாகும் உத்தமம் நன்று.

## 2—2—2 அகஸ்தியன்

எண்ணிய இரண்டும் ரெண்டும் இரண்டும் வந்துதிக்குமாகில், சென்னியில் நினைத்த தெல்லாம் ஜெயம்பெற நன்மையாகும், நன்னிய உறவு சேரும் நயம்பெரு தெய்வத்தாலே, மண்ணிய பிணியுந்தீரும் வல்லரும் பொருளுண்டா மன்றே.

பகைத்தவு ருறவுமாகும் புண்ணிய பயிருமுண்டாம், வகைத்தது வெற்றியாகும் வலியவே பொருளும்கூடும், செகத்திலே யொருவர்க்காக செந்தித்த கருமம் நன்றும் அகஸ்தியன் றன்னைக் கண்டால் அழகுடன் நன்மை தானே.

வ-ம். ஒரு குடிக்காரனாலே எண்ணிய காரியமும் வரும் வீட்டு தேவதைக்கு பூஜை பண்ணி வைக்க சகல காரியமும் கைகூடும் ரோமரிஷி வனத்தில் அருச்சுனன் ஈஸ்வரனைக் கண்டு பாசுபதம் வாங்கினயிடம் சந்தோஷமான வார்த்தை கேட்கவேண்டும் ஈஸ்வரனாலே தேவதைக் கூட்டங்களறி உண்டு இவர்களுக்கு பிறகு தூண்டும் பூசைவாங்கி, ஊசைசங்கிலி, யோசனைபேச்சி, ருக்கச்சி உண்டு இவைகளுக்கு முன்னே நிங் கறுப்பு அவரால் காரியமுண்டு அன்பத்தொரு நாளையிலே ஜெயமாகும் உத்தமம் நன்று.

## 2—2—10

கூடியே இரண்டும்இரண்டும் பத்தும்வந் துதிக்குமாகில், நாடியகருமம்நன்றும் நலமாகும்தெய்வத்தாலே, வாடியபயமுமில்லை வான்பொருள்வந்து

சேரும், நீடியதூரம்போனோர் நெறியுடன்வந்து சேர்வார்.

வ-ம். ஒரு சோபனங் கொள்ளவேண்டும் யாது காரியம் நினைந்தாலுந் தடையில்லாமல் கைகூடும் உத்தமம் நன்று.

## 2—2—100 சோதி

கேட்டதோர் இரண்டும் இரண்டும் நூறும் வந்துதிக்குமாகில், வாட்டமில்லாமற்றுனே வருங் கலியாணங்கூடும், கூட்டமும் பொருளுமுண்டாம் குடியது புகுதுநன்றும், தாட்டிக ரேசனாலே தனிப்பொருள் வந்துகூடும்.

திருவுடன் செல்வமுண்டாம் செம்பொன்னும் வெள்ளியுண்டாம், கருதிய வுறவுங்கூடும் காரியம் பலனுமுண்டாம், மருவிய யின்பமுண்டாம் மக்களுஞ் சுற்றமுண்டாம், அருவுடன் சோதி கண்டாலன்புடன் வாழ்வார்தானே.

வ-ம். அரசனாலே ஒரு கலகம் வந்து சடுதியில் தீர்ந்துபோகும். நினைத்த காரியமெல்லாஞ் செயமாகும். இடுக்கந்தீரும். தேசத்தின் தெய்வமானல் சிவாலயமுண்டு; சுத்த முகமுண்டு: அவராலே நன்மையுண்டு; உத்தமம் நன்று.

## 2—10—1

பேசிய இரண்டும் பத்தும் ஒன்றும்வந்துதிக்குமாகில் ஆசையாய் பார்த்ததெல்லா மன்புடன் செயமதாகும், மசிவுடன் பொருளுண்டாம்

மாயவன் அருளுமுண்டாம், திசையினிற் போனூர் மீள்வர் திருக்கலி யாணங்கூடும்.

வ-ம். யாது காரியம் நினைத்தாலுங் கை கூடும். துரோபதையபமன் உதவி செய்வாள்; உத்தமம் நன்று.

## 2—10—2

நாடிய இரண்டும்பத்தும் இரண்டும்வந் துதிக்குமாகில், கூடிய கருமம்நன்றூங்குணமாகுந் தெய்வத்தாலே, தேடிய செல்வமுண்டாந் திர முடன் பொருளுமுண்டாம், நாடிய பகையுமில்லை நலமுடன் உறவுகூடும்.

வ-ம். மனைகட்டியிருக்க திரவியமுண்டாகும். ஆடு மாடு வெள்ளாமை பலிக்கும். பிணக்குந் தீரும். பிள்ளை பலனுண்டாகும். நினைத்தது கை கூடும். வந்தவினை வழிவிலகும். மாற்றான்படை வெல்லாது. உறவு சேரும். உத்தமம் நன்று.

## 2—10—10 மூதேவி

சொல்லிய இரண்டும் பத்தும் பத்தும் வந் துதிக்குமாகில், வல்லியதீமையாகும் வருத்தமும் பகையுமாகும், மெல்லியாளொருத்தியாலே வினை வரும்முன்னேயீனம், கல்விகளனேகமுண்டுகைப் பொருளகன்று போகும்.

பூதலம்விட்டுப்போகும்பொங்கியவினையுமுண்டாம் தாதகப்பொருளுமில்லை தயவுகள்நன்மையில்லை ஆதரவானபேரும் அகலவேபோவாரென்றூர்[னே மூதேவிதன்னைகண்டால் முடுகவேவேண்டாந்தா

வ-ப். நான் சொல்வதை மறவாதே முயன்ற காரியம் படியாது கூடவுங் கொடுக்கவு மாகாது; ஒரு பெண்ணாலே பொல்லாங்கு வரும்; கெட்ட காரியந் தோணுது; வியாதி திராது; பெண்தெய் வத்துடனே சேர்ந்த இருபத்தொரு மூகமுண்டு; அதிற்சேர்ந்த பெண்ணுங் கறுப்புமுண்டு; அது மெத்த கோபாக்கினியாக விருக்கிறது; குளுண்ம செய்தால் நினைத்த காரியம் பலிக்கும். மத்திபம்.

## 2—10—100

எதிர்த்ததோர் இரண்டும் பத்தும் நூறும் வந்துதிக்குமாகில், பதித்திடக் கேட்டதெல்லாம் பலித்திடும் நன்மையாகும், விரைவிலே மழையு மில்லை பின்மழை நன்றாய்ப் பெய்யும், கதித்திடும் வீடுகட்ட கன்னியைக் கொள்ள நன்றே.

வ-ப். நன்று யாது காரியம் நினைத்தாலும் நன்மையாகும்; வீடுகட்ட உத்தமம் நன்று. பில்லி சூனியத்தில் பட்ட பிணியுந் தீரும்.

## 2—100—1

வந்திடும் இரண்டும் நூறும் ஒன்றும்வந் துதிக்குமாகில், வந்தது நன்மையாகும் மழையது மிகவுண்டாகும், தந்திடும் பொருளும் வாழ்வும் தனமுடன் வந்துசேரும், விந்தையாய்ப் பொரு ளும்வந்து விரைவுடன் நன்மையாகும்.

வ-ம். நினைத்தகாரியம் உடனே பலிக்கும்; பிணிதீரும்; உறவுண்டாகும்; தன்பேச்சு மேலாக

யிருக்கும்; நல்லவர் உறவுவந்து சேரும்; தேவி சகாயம் உத்தமம் நன்று.

## 2—100—2 கண்ணடி

துங்கமாய் இரண்டும் நூறும் இரண்டும்வந் துதிக்குமாகில், பொங்கிய நன்மைவந்து போர் வினை போலநன்றும், திங்களும் மாரிபெய்யும் தீவினை யகன்றுபோகும், சங்கர னருளினாலே சாபங்கடரும் நன்றே.

விண்ணுளு மன்னராலும் வேந்தரால்வினையு மில்லை, பண்ணுக வினையுமுண்டாம் பழுதில்லா நன்மையுண்டாம், குண்ணுத வாழ்வுமுண்டாங் குறைவில்லா செல்வமுண்டாம், கண்ணடி கண் டக்காலே காரியம் பலிக்குந்தானே.

வ-ம். தெய்வ பலத்தினாலே பலருடனும் நன்றாய் போக சம்பத்துண்டாகும். இனிமேல் வெள்ளாட்டி வெண்கலங்கொள்ள மிகவும்நன்று. தேவதை பெண் தேவதை சுத்த முகமுண்டு அவ ரோடு சேர்ந்த கறுப்பு ஏழு முகமுண்டு சேர்ந்த சங்கிலி சோணை பேச்சி ராக்கச்சி யுண்டு இவர் களை அணைவுதல் பண்ணினால் நினைத்த காரியஞ் ஜெயமாகும் உத்தமம் நன்று.

## 2—100—10

நித்தமும் இரண்டும் நூறும் பத்தும்வந் துதிக்குமாகில், வெற்றியாய்க் கேட்டதெல்லாம் விரும்பிய தோஷத்தாலே, பத்தியாய் தோஷந்

திருப் பதரிடும் பிணியும் நீங்கும், கத்திய கன்னி யாலே காணியும் பிள்ளையுண்டாம்.

வ-ம். வந்த வழக்கு வெல்லும் உறவுவரும் நினைத்தகாரிய மெல்லாம் உடனே பலிக்கும் நன்மை யுண்டாகும் உத்தமம் நன்று.

2—100—100

செய்யவே இரண்டும்நூறும் நூறும்வந் துதிக்குமாகில், உய்யவே நினைத்ததெல்லாம் உத் தமம் பொருளுமுண்டு மெய்யது பிணியுந் தீரும் மேல்மழை யகமும்நோம், செய்பகை நீங்கிடு வார் தெய்வத்தைக் கார்ப்பாராகில்.

வ-ம். தெய்வத்திற்கு குளிர்ச்சிபண்ண யாது காரியம் நினைத்தாலும் உடனே கைகூடும், பகை யுறவாகும், தேவதையை ஆதரிக்க வெகு பலனைக் கொடுக்கும், நன்மையுண்டாம், சிவனருளுண் டாம், பிள்ளையுண்டாம் உத்தமம் நன்று.

10—1—1

பன்னிய பத்துமொன்றும்ஒன்றுவந் துதிக்கு மாகில், துன்னியர் நினைத்ததெல்லாம் அழிவுண்டு வினையுமுண்டு, பண்ணிய நோயுமுண்டு பரிந்தது தெய்வத்தாலே, இன்னிலையானதெல்லா மிடுக்க முந் தீதேயாகும்.

வ-ம். தொடுத்த காரியமெல்லாம் சேதமுண் டாகும் ராஜாக்களாலே தேசம் பாழாம் வியா கூலம் நன்றல்ல உத்தமம் தன்று.

## 10—1—2

குறைவில்லா பத்தும் ஒன்றும் இரண்டும்வந் துதிக்குமாகில், திறமுடன் கேட்டதெல்லாம் தெளிவுடன் நன்மையாகும், திரும்பியும் பயமு மில்லை சிவனருளாகி வாழும், துறவுடன் பிணி யுந்தீரும் தொடுத்தவர் உறவதாமே.

வ-ம். நினைத்த காரியம் உடனே பலிக்கும் உத்தமம் நன்று.

## 10—1—10

பார்த்திடும் பத்தும் ஒன்றும் பத்தும்வந் துதிக்குமாகிற், பத்திய பாமனுலே பண்ணிய தெல்லாம்நன்மை, உற்றவர் உறவுசொல்லும் உதவியா யிருந்துவாழும், சித்துமன் மதனுலே தான் செல்வமும் நன்மையாமே.

வ-ம். நினைத்த காரியமெல்லாம் ஒரு மன்மத னுலே சகல காரியமும் நன்மையாகும். ஒரு மனி தன் வந்து நன்மை சொல்லவேணும் களவிலே போன உடமை வந்து சேரும். வெகு நன்மை உத்தமம் நன்று.

## 10—1—100

பொருந்திடும் பத்தும் ஒன்றும் நூறும்வந் துதிக்குமாகில், அருந்திடும் தெய்வத்தாலே அழ குடன் நன்மையாகும், தெரிந்திட வழக்குவெல் லும் சேர்ந்திடும் பொருளுங்கூடும் பரிந்திட்ட வுறவு சேரும் பங்குடன் நன்மையாமே.

வ-ம். யாது காரியம் நினைத்தாலும் தடையில்லாமற் கூடும் கலியாணமுண்டாம் புத்திர சம்பத்துண்டாம் நினைந்த காரியம் கைகூடும். உத்தமம் நன்று.

10—2—1

முந்திய பத்தும் இரண்டு ஒன்றும்வந்துதிக்குமாகில், வெற்றியாய் தொடுத்ததெல்லாம் விவாகமும் வந்துசேரும், உற்றதோர் வெள்ளாமைசேரு முயர் மழை தானுமுண்டு, மெத்தவே யசுமுமேறும் வேண்டிய நன்மை தானே.

வ-ம். நன்மை பலிக்கும் தெய்வ சகாயத்தினாலே சகல காரியமும் ஜெயமாகும். வீமன் புருசா மிருகத்தின் பால் வாங்கி வந்தவுடன் வெகு நன்மை உத்தமம் நன்று.

10—2—2

ஒருபத்தும் இரண்டும் இரண்டும்வந்துதிக்குமாகில, பெருமையாய் சகாயஞ்சேரும் பேசிடுந் தெய்வத்தாலே, அறம்பொருள் வந்துசேரும் ஆடுமாடுகளும் நன்றாய், அவருரைப் படியும் செல்லும் வாழ்வுமே நன்மை தானே.

வ-ம். யாது காரியம் நினைத்தாலும் தடையில்லாமற் கைகூடும். பில்லி சூனியங்களும் பெரும் பகையும் நோயும் தீரும் சகல காரியமும் பலிக்கும் உத்தமம் நன்று.

10—2—10

துஞ்சிய பத்தும்ரெண்டும் பத்துமவந்துதிக்குமாகில், அஞ்சிட வேண்டாமின்னம்

அருள் பொருள் வந்துகூடும், வெஞ்சமும் பகையு மில்லை மெய்ப்பொருள் வந்துகூடும், கொஞ்சிய மொழியினாலே கொள்ளவே நன்மையுண்டாம்.

வ-ம். யாது காரியம் நினைத்தாலும் நன்மை யாகப் பலிக்கும் பொன்னும் பொருளும் வரும். இராஜ காரியமுண்டு உத்தமம் நன்று.

10—2—100

உன்னிய பத்தும் இரண்டும் நூறும்வந் திக்குமாகில், இனியவுத் தமமேநன்று யிறை யவனருளினாலே, முன்னமே நோயும்வந்து மொழிதீர்த்து நன்மையாகும், பண்ணிய தெய் வத்தாலே பலித்திடும் நன்மை தானே.

வ-ம். இன்னிமித்தியம் நன்று நீர் நன்மை வினவிக் கேட்ட காரியம் தருமராஜா பொறுத்தது போல் நீயும் பொறுத்தாயானால், நினைத்த காரிய மெல்லாம் கைகூடும். நீ முயன்ற காரியம் நன்று வியாபாரம் பலிக்கும் கேட்ட பொருளும் ஜெய மாகும் உத்தமம் நன்று.

10—10—1

கருதிய பத்தும் பத்தும் ஒன்றும்வந் திக்கு மாகில், வருவது தீமைகேடு மழையில்லை பிணியுந் துன்பம், அணுகிடுந் தானியங்களை அரசரால் லாபமுண்டு, பெரும்படை பாகங்கேடும் பெருகிய துன்பந்தானே.

வ-ம். தொடுத்த காரியமெல்லாம் பிணியி னால் வியாகூலமுண்டு அடுத்தவராலே ஒரு லாபம்

வந்து வியாகூலம் பண்ணிவைக்கும் மத்திபம் நீது.

10—10—2

பகுந்திடும் பத்தும் பத்தும் இரண்டும்வந் துதிக்குமாகில், வருந்திய நன்மையாகும் மழை யுண்டு விளைவுமில்லை. பொருந்திய விளைவுமுண்டு பிணியுடன் தீதுபோகும், பெருகிய பலமுமில்லை பிணியில்லை பிள்ளையுண்டாம்.

வ-ம். யாதுகாரியம் நினைத்தாலும் மடி பொருள்போல் வந்துகூடும்; தன்பேச்சு மேலாக விருக்கும் உத்தமம் நன்று.

10—10—10

பத்துடன் பத்தும்பத்தும்பத்துவந் துதிக்கு மாகில், இத்துடன் கோடியாடை இன்பமாய் நன்மையாகும், அருள்பொருள் வந்துசேரும் ஆடுமாட்டிமையே கொள்ளே, யித்துடன் பிள்ளை யுண்டாம் பொற்பிணியுடனே தீரும்.

வ-ம். நவசந் தானியம் அகமெலியும் சந் தோஷமான விசனம் வரும் பாஞ்சாலதேசத்தில் திரௌபதையம்மனை அருச்சுனன் கலியாணம் பண்ணவிடம் உத்தமம் நன்று.

10—10—100

தொடர்ந்திடும் பத்தும் பத்தும் நூறும்வந் துதிக்குமாகில், இடம்பெற நினைத்ததெல்லாம் யிச்சையாய் வந்து கூடும், அடமதாய் வழக்கு

வெல்லும் ஆனதோர் தெய்வத்தாலே, சடுதியாய் பிணியுந்திரும் தாரணி கொள்ள நன்றே.

வ-ம். நினைத்த காரியமெல்லாம் சீக்கிரத்திலே பலிக்கும் அடிமைசிறைகொள்ள நன்று பில்லி சூனியத்தில் வாப்பட்ட பிணியுந்திரும் அர்ச்சுனன் விராடபுரத்திலே மாடு சிறை திருப்பின விடம் உத்தமம் நன்று.

10—100—1

சூறியபத்தும் நூறும் ஒன்றும்வந் துதிக்கு மாகில், வீரியச் செல்வமுண்டாம் மிக்கவே பொருளுங் கூடும், பேருள்ள பிள்ளையுண்டு பெருஞ் செல்வ சகாய முண்டாம், தேறுதல் செய்வர் நல்லோர் செல்வமும் சகாய முண்டாம்.

வ-ம். முன்னிடத்திலே போனாலும் பொருள் வந்துசேரும் யாதுகாரியஞ் செய்தாலும சந்தோஷமாக உதவிசெய்வார் நினைத்ததெல்லாம் கைகூடும் உத்தமம் நன்று.

10—100—2

ஒத்துறு பத்தும் நூறும் இரண்டும்வந் துதிக்குமாகில், தொடுத்தது வெற்றியாகும் தொல்லையுந் தீர்ந்துபோகும், இடுக்கமுந் துன்பந் திரும்மின்பமாய் பொருளுஞ்சேரும், அடுத்தவருறவதாகும் ஆண்பிள்ளை பெறுவாள் நன்றே.

வ-ம். இடுக்கமில்லை யாது பொருளும் வந்து கைகூடும் நினைத்த காரியம் பலிக்கும் ஆதினமாகும் உத்தமம் நன்று.

## 10—100—10

அறிந்துடன் பத்தும் நூறும் பத்தும்வந் துதிக்குமாகில், தொடர்ந்திடும் வழக்குவெல்லும் தோஷமுங் கலகந்திரும், அழுந்தியபகையுந்திரும் தீவினை யகன்றுபோகும், திடங்கொண்டு போனார் மீள்வார் கெட்டு வெள்ளாமைசேரும், வடிவுடன் மூலையினாளே வந்துகை கூடுந்தானே.

வ-ம். ஒரு பெரியவனாலே நன்மையாகும் நினைத்த காரியமெல்லாம் பலிக்கும் உத்தமம் நன்று.

## 10—100—100

எதிர்த்ததோர் பத்தும் நூறும் நூறுவந் துதிக்குமாகில், பத்துடன் நல்லதெல்லாம் பலித் திடும நன்மையாகும், மதிப்பினின் மழையுமில்லை பின்மழை நன்றாய்ப்பெயும், கதித்திட கன்னி கொள்ள கனவீடு கட்ட நன்றே.

வ-ம். யாது காரியம் நினைத்தாலும் நன்ற தாகும் குடிபுகுதல் நன்று பில்லி சூனியத்தில் பிணி படாமல் வியாதி தீரும் பெருமாள் ரட்சிக்க வேண்டியது உத்தமம் நன்று.

## 100—1—1

வ-ம். இன்னிமித்தம் நன்று நீர் நம்மை வினவிக் கேட்கிற காரியம் திருவுளத்தினாலே உன் மனதின்படியே சேகரத்திற்கு வரமாட்டாது பகை யுடன் பாக்கியங்களும் வந்து தீர்ந்தது ஒருவீரன்

ஐயன் பிடாரி வீட்டிலே உண்ணப்பட்டதேவதை குறையினாலே அழிந்துபோச்சுது நினைத்த காரியம் செயமில்லை உத்தமத்தில் மத்திபம்.

100—1—2

வ-ம். இன்னிமித்தம் நன்று நீர் நம்மை வினவிக் கேட்கிறகாரியம் காசி விஸ்வநாதர் திருவுளத்தினாலே மாடு கொள்ளவும், பெண் கட்டவும், சம்பத்துண்டாகவும் நாடிக்கேட்ட காரியங் உன்மனதின்படியே கைகூடிவரும் தெய்வ சகாயமுண்டு பயப்பட வேண்டாம், உத்தமம் நன்று.

100—1—10

வ-ம். இன்னிமித்தம் நன்று நீர் நம்மை வினவிக் கேட்டகாரியம் குறைவில்லாத பஞ்ச பாண்டவர் போல பட்டாபிஷேகமா யிருக்கவும், ஒரு வஞ்சகமில்லாத சத்தியவாசனாக விருக்கவும், கனத்த வியாபாரம் பண்ணவும் இப்படி நாடிக கேட்ட காரியம் உன்மனதின்படியே ஜெயமாகும் உத்தமம் நன்று.

100—1—1

வ-ம். இன்னிமித்தம நன்றல்ல நம்மை வினவிக்கேட்கிறதும், நாரத மகாமுனிவர் திருவுளத்தினாலே அரண்மனைகட்டவும் அதனாலே பெருஞ் செல்வமாக விருக்கவும் நாலுபேருக்கும் நல்லவனாக விருக்கவும், கெட்டகாரியம் உள்ளுக்குள்ளே ஒரு சனியன் இருக்கிறான் அவனாலே அபிமானக் குறைவுவரும ஆகாது மத்திபம்.

## 100—2—1

வ-ம். இன்னிமித்தம் நன்று நீர் நம்மை வினவிக் கேட்கிறதும், நாரத மகாமுனிவர் திருவுளத்தினாலே உன் காரியமெல்லாம் பலிக்கும். முன்னாலே உன் பேரிலே கோளுங் குண்டுணியும் சொன்னபேர்கள் கெட்டுப் போனார்கள் உனக்கு ஒரு சிந்தனையுமில்லை. ஒரு மானிறக்காரனாலே உன் காரியம் ஜெயமாகும். உத்தமும் நன்று.

## 100—2—2

வ-ம். இன்னிமித்தம் நன்று நீர் நம்மை வினவிக் கேட்கிறகாரியம் இராமநாதசுவாமி திருவுளத்தினாலே பால் பசுக்கொள்ளவும், வெள்ளாண்மை செய்யவும், செல்வத்திலே யிருக்கவும் இப்படி நாடி கேட்ட காரியம் இருபத்தொரு நாளையிலே ஜெயமாகும். உத்தமம் நனறு.

## 100—2—10

வ-ம். இன்னிமித்தம் நன்று நீர் நம்மை வினவிக்கேட்கிற காரியம் காளையார் திருவுளத்தினாலே மாடு கொள்ளவும், பயிர் செய்யவும் நாடி கேட்டகாரியம் உன்மனதின்படியே ஜெயமாகும் உத்தமம் நன்று.

## 100—2—100

வ-ம். இன்னிமித்தம் நன்று. நீர் நம்மை வினவிக் கேட்கிற காரியம் அரிராசப்பெருமாள் திருவுளத்தினாலே ஆயுதங் கொள்ளவும், ஒரு

துரைகளிடத்தில் சேவகமா யிருக்கவும், சேர்வை வாங்கவும் இப்படி நாடி கேட்ட காரியம் உன் மனதின்படியே பாக்கியமும் பலனுண்டாம் பெரிய வனாக யிருப்பாய் உத்தமம் நன்று.

100—10—1

வ-ம். இன்னிமித்தம் நன்று. நீர் நம்மை வினவிக் கேட்கிற காரியம் பரமசிவத்தின் திருவுளத்தினாலே பணம் வாங்கவும் பெண் கட்டவும் பிள்ளை பிறக்கவும் நாடி கேட்ட காரியம் கைகூடி வரும் பயப்பட வேண்டாம். தெய்வசகாயமுண்டு. உத்தமம் நன்று.

100—10—2

வ-ம். இன்னிமித்தம் நன்று நீர் நம்மை வினவிக் கேட்கிற காரியமும் சூரியப் பிரசாசம அநுக்கிரகத்தினாலே பிடவையுடனே கூடினகாரியம் பொன்னுடனே சேர்ந்த வகை தங்கும் தங்காமல்போன பொருள் காணலாமோவென்றுகேட்ட காரியம் கைகூடிவரும். உத்தமம் நன்று.

100—10—10

வ-ம். இன்னிமித்தம் நன்று. நீர் நம்மை வினவிக் கேட்கிற காரியம் வரதராஜப்பெருமாள் திருவுளத்தினாலே ஆடுமாடு கொள்ளவும்; பயிர் செய்யவும்; நித்திய கலியாணம் பச்சை தோரணமும் இப்படி நாடி கேட்ட காரியம் உன் மனதின் படியே சேகரத்திற்கும் வரும். உத்தமம் நன்று.

100—10—100

வ-ம். இன்னிமித்தம் நன்று. நீர் நம்மை வினவிக்கேட்கிற காரியம் ஆதிலட்சுமி திருவுளத்தினாலே ஒரு சிவலேயான மனிதன் மேற்கேயிருக்கிறன், அவனாலே அனேக காரியம் ஜெயமாகும். கலியாணங்கூடும். அந்த மனிதனாலே உன் காரியமெல்லாங் கெட்டியாகும். யாதுகாரியமும் உன்மனதின்படியே சேகரித்து வரும் பயப்படவேண்டாம். உத்தமம் நன்று.

100—100—1

வ-ம். இன்னிமித்தம் நன்று நீர் நம்மை வினவிக் கேட்ட காரியம் அங்காளம்மன் திருவுளத்தினாலே ஒரு மனிதனை நாடி அவனாலே காரியமுள்ள வசனமுண்டோ கன்னிப் பலனுண்டோ தெய்வக்குறையுண்டோ வென்று நாடி கேட்க பலிக்கும். உத்தமம் நன்று.

100—100—2

வ-ம். இன்னிமித்தம் நன்று நீர் நம்மை வினவிக் கேட்ட காரியம் லட்சுமி திருவுளத்தினாலே காணிகொள்ளவும் அதினாலே நாலு ஜனம் பிழைக்கவும் இப்படி நாடி கேட்ட காரியம் ஒரு சிவலே மனிதனிருக்கிறன் அவனாலே உனக்கு காரியம் ஜெயமாகும் மழையுண்டு பயப்படவேண்டாம் பலனுண்டு. உத்தமம் நன்று.

100—100—1

வ-ம். இன்னிமித்தம் நன்று நீர் நம்மைவினவிக் கேட்கிற காரியம் சிவநந்தியீஸ்வரன் திரு

வுளத்தினாலே ஊர் கொள்ளவும் உறவுதேடவும் பெண்ணுக்கும் பொருளுக்கும் நிலைமைக்கும் கேட்கிற காரியம் உன் மனதின்படியே ஜெயமாகும் தெய்வச் சகாயமுண்டு யாது காரியமுங் கைகூடும். உத்தமம் நன்று.

100—100—100

வருகிய நூறும் நூறும் நூறும்வந் ததிக்குமாகில் உருங்கிட நன்மையாகும் வெற்றியாய்ப் பொருளுஞ்சேரும், வருந்திய வழக்கு வெல்லும் வருந்திய பயமுமில்லை, நெருங்கிய பலனுங்கூடும் நினைத்தது பலிக்குந்தானே.

வ-ம். நினைத்தகாரியம் பலிக்கும் ஒரு மங்கள காரியம் கொள்ளவேண்டும் உத்தமம் நன்று.

சந்தனநூல் சாஸ்திரம் முற்றிற்று.

---

பதிப்பாளர்:— அ. குழந்தைவேல் முதலியார்
தெய்வமகள் விலாசம் பிரஸ்
24. தாண்டவராயப்பிள்ளைவீதி, சென்னை-1,

★ தெய்வமகள் பதிப்பை கவனித்து வாங்கவும் ★

# கனவின் பலாபலன்கள் விளக்க சாஸ்திரம்

[சோதிடவித்வான் டி. சி. பா. சாரதி எழுதியது]

இந்நூலில் ஆகாயம் வாயு தேயு அப்பு பிருதிவி இவ்வைந்தினாலாய கனவின் பலாபலன்களும், மக்கட்பிரிவு, நான்கு வருணத்தோர், அங்கபின்னர் இவர்களைக் காணும்கனவின் பலாபலன்களும், மக்கட்பொதுகனவின் பலனும், மிருகம் நீர்ஜந்துக்கள் அண்டஜங்கள் பறவைக்கணங்கள் பல விருக்ஷங்கள் புசிக்கும் பண்டம் சிற்றுண்டி அன்னம் பால் பழம் கறிகாய் கிழங்கு நவதானியம் புளி வெல்லம் உப்பு மிளகாய் புஷ்பங்கள் தாம்பூலாதிகள் முதலிய கனவின் பலன்களும், பொன் வெள்ளி முத்து மாணிக்க வகைகளின், கனவின் பலன்களும், பொதுவகை கடிகாரம் மணி சங்கீதவகை கனவின் பலாபலன்களும் மிகத்தெளிவாய் விளக்கிக்காட்டி, அவரவர்கள் அதனால் அடையும் நன்மை தீமைகளை அறிந்துகொள்ளும்படியாய் எளியமுறையில் மிகத் தெளிவாய் விளங்குமாறு அச்சிடப்பட்டு இருக்கிறது.

இதன் விலை ரூபா 1